TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075852

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் கடலூர் PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு Year: ஆண்டு 2022 FIR No.: மு.த.அ. எண் 04/2022 Date: நாள் 05.07.2022

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7A
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 01.07.2022 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 11.00 hrs Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 05.07.2022 Time நேரம் : 0800 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - II Time நேரம் : 0800 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 10 கி.மீ. மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி வி.ஏ.ஒ. அலுவலகம், மேல்பாதி கிராமம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : -- District : --
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A.ரவி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஆறுமுகம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 49 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் ---
Date of Issue : வழங்கப்பட்ட நாள் --- Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் வெல்டிங் வேலை (g) Address : முகவரி நெ.54, அம்பேத்கர் நகர், மேல்பாதி கிராமம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம்,

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

பாஷா (எ) முஜிபூர் ரகுமான், கிராம உதவியாளர், மேல்பாதி கிராமம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

வாதியால் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருத்தும் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

நான் இன்று **05.07.2022** ஆம் தேதி காலை **08.00** மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, நிலையம் ஆஜரான கடலூர் மாவட்டம், பண்ருட்டி தாலுக்கா, மேல்பாதி கிராமம், நெ.**54** அம்பேத்கர் நகரைச் சேர்ந்த ஆறுமுகம் மகன் A.ரவி என்பவர், புகார் மனுவினை என்னிடம் கொடுத்தார். அந்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : 05.07.2022, அனுப்புநர், A.ரவி, (வயது 49), த/பெ ஆறுமுகம், நெ.54, அம்பேத்கர் நகர், மேல்பாதி கிராமம், பண்ருட்டி தாலுக்கா, கடலூர் மாவட்டம், செல் – 9965202250, பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கடலூர் மாவட்டம். ஐயா, நான் நெல்லிக்குப்பத்திற்கு அருகிலுள்ள மேல்பாதி கிராமத்தில் வசித்து

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed S. திருவேங்கடம், ஆய்வாளர், ஊ.த.க.பி, கடலூர். Rank ........ to take up the investigation / Refused Investigation / transferred to PS.............................. on point of jurisdiction.
எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ............................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A Ravi

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 5/7/22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்

Name பெயர் M. DEVANATHAN
Rank நிலை ADSP No. எண் ......
VXAC. Cuddalore.

வருகிறேன். நான் வெல்டிங் வேலை செய்து வருகிறேன். நான் ஒன்பதாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது அக்கா ஜெயலட்சுமி என்பவர் எனது ஊரிலேயே மாரியம்மன்கோயில் தெருவில் வசித்து வருகிறார். அவரது கணவர் செல்வராஜ் கடந்த 06.05.2022 ஆம் தேதி இறந்துவிட்டார். எனது அக்கா வாரிசு சான்று வேண்டி இ.சேவை மையம் மூலம் பணம் ரூ.60.00 கட்டி 18.06.2022 ஆம் தேதி விண்ணப்பித்திருந்தார். அவருக்கு உடல்நிலை சரியில்லாததால், என்னை அழைத்து மேல்பாதி வி.ஏ.ஒ. ஆபிஸ்க்கு சென்று வாரிசு சான்று சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு என்னிடம் சொன்னார். அப்போது என்னிடம் இ.சேவை மையத்தில் கொடுத்த இரண்டு ரசீது மற்றும் அவரது கணவர் செல்வராஜின் இறப்பு சான்று ஆகியவற்றை கொடுத்து அங்கு காண்பிக்க சொன்னார். அதன்படி நான் 01.07.2022 ஆம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு மேல்பாதி வி.ஏ.ஒ. ஆபிஸ்க்கு சென்றேன். அங்கிருந்த தலையாரி பாஷா என்கிற முஜ்பூர் ரகுமான் என்பவரிடம் எனது அக்கா வாரிசு சான்று வேண்டி விண்ணப்பித்த விவரத்தை சொல்லி, வாரிசு சான்று சீக்கிரம் கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு நான் அவரிடம் சொன்னேன். அதற்கு அவர் செல்வராஜின் இறப்பு சான்றையும், இ.சேவை மையத்தில் கொடுத்த இரசீதுகளையும் அவரிடம் கொடுத்தேன். அதனை அவர் வாங்கி பார்த்து அவரது செல்போனில் படம் பிடித்துக்கொண்டார். பின்னர் அவர் என்னிடம், வாரிசு சான்று கிடைக்க தான் ஏற்பாடு செய்வதாகவும், அதற்கு கொஞ்சம் பணம் செலவாகும் என்றும் சொன்னார். அதற்கு அவரிடம் நான், ஏற்கனவே எனது அக்கா இ.சேவை மையத்தில் கட்டிவிட்டார்கள் என்று சொன்னேன். அதற்கு அவர் அந்த பணம் அரசாங்கத்துக்கு போய்டும், நீ எனக்கு தனியாக 4000 ரூபாய் பணம் கொடுக்கனும். அப்போதுதான் அந்த வாரிசு சான்று சீக்கிரம் கிடைக்க உரிய அதிகாரிகளிடம் சிபாரிசு செய்து வாங்கி கொடுக்க ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். இல்லையென்றால் உனக்கு கடைசிவரை வாரிசு சான்று கிடைக்காது என்றார். அப்போது நான் அவரிடம் என்னுடைய அக்கா கணவரை இழந்து கஷ்டப்படுகிறார் பாத்து செய்ங்க என்று சொன்னேன். அதற்குபின் அவர் 1000 ரூபாய் குறைத்துக்கொண்டு, கடைசியா 3000 ரூபாய் வாங்கிவந்து கொடுங்கள் என்று என்னிடம் சொன்னார். நான் அவரிடம் அக்காகிட்ட சொல்லி பணம் வாங்கிவருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்னர் நான் எனது அக்காவிடம் சென்று நடந்த விவரத்தையும், மேல்பாதி கிராம உதவியாளர் பணம் ரூ.3000/– கேட்ட விவரத்தையும் அவரிடம் சொன்னேன். அவர் யோசனை செய்து பார்த்துவிட்டு, லஞ்ச பணம் கொடுத்து வாரிசு சான்று பெற விருப்பமில்லை என்று என்னிடம் சொன்னார். தனக்கு 60 வயதுக்குமேல் ஆகிவிட்டது என்றும், உடல்நிலை வேறு சரியில்லை என்றும், என்னால அலைய முடியாது என்று

[signature]

சொன்னார். அவர் சார்பாக என்னையே மேல்பாதி கிராம உதவியாளர் மீது லஞ்ச ஒழிப்புத்துறையில் புகார் கொடுக்க என்னிடம் சொன்னார். அவர் கேட்ட லஞ்சப் பணம் ரூ.3000/–த்தையும் அவர் என்னிடம் கொடுத்தார். என்னிடம் லஞ்சப்பணம் கேட்ட மேல்பாதி கிராம உதவியாளர் பாஷா என்ற முஜிபூர் ரகுமான் என்பவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி தங்களிடம் இன்று நான் இந்த புகார் மனுவை கொடுக்கிறேன். அவர் கடைசியாக கேட்ட பணம் ரூ.3,000/– எடுத்து வந்துள்ளேன் என்ற விவரத்தை தங்களிடம் தெரிவித்து கொள்கிறேன். இப்படிக்கு, (ஒப்பம்) A.Ravi. அய்யா, 05.07.2022 ஆம் தேதி காலை 08.00 மணிக்கு வாதியானவர் நிலையம் ஆஜராகி கொடுத்த மேற்படி புகார் மனுவை பெற்று விசாரணை மேற்கொண்டேன். மேற்படி வாதியின் புகார்மனுவில் பிடிக்கக்கூடிய குற்றச்சாட்டிற்குரிய முகாந்திரம் இருந்ததால், உரிய அனுமதி பெற்று, இன்று 05.07.2022 ஆம் தேதி காலை 09.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு Cr.No.04/2022, U/s. 7A of The Prevention of Corruption (Amendment) Act 2018 படி வழக்கு பதிவு செய்தேன். மேலும் வழக்கு கோப்பினை மேல் நடவடிக்கைக்காக கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் S.திருவேங்கடம் வசம் ஒப்படைத்தேன். இதன் அசலை வாதி கொடுத்த புகார் மனுவுடன் இணைத்து Honourable Chief Judicial Magistrate cum Special Judge, Cuddalore அவர்களுக்கும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கும் சமர்ப்பிக்கிறேன்.

[signature] 5/7/22